# புல்லாணி வாருங்கள்.



புல்லாணி என்ற திருத்தலத்திற்கு வாருங்கள் ,

வில்லாளனை புல்லணையில் கண்டு மகிழுங்கள் !

புல்லாணி.......

நாதியற்று இத்தலம் வரும் பக்தர்களுக்கு ,

அருள் பாலித்திட பத்மாஸனி உடனிருக்க ;

ஆதிஜகந்நாதனை வந்திங்கு வணங்கியவர் - மன ,

இருள் நீங்கப்பெற்று நலமுடன் வாழ்வார்கள் !

புல்லாணி.....

அஞ்சனையின் மைந்தனும் இத்தலமிருக்க ,

சேதுவில் நீராடி பாவம் போக்கவருவோர்கே ;

அஞ்சவேண்டாம் என்றும் துணையிருப்பேன் - என ,

ஓதுவதைக் கண்டு மகிழ இத்தலம்வாருங்கள் !

புல்லாணி.....